இவர் சொன்னதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. எதிரி நெருங்க நெருங்க, விபத்து அதிகமாகி, கெலியும் உண்டாகிவிட்டது. மிஸ்டர் சர்ச்சில் திரும்பிய மறுநாளே, ப்ரெஞ்சு சபை மறுபடியும் கூடி 5-மணி நேரம் சர்ச்சை செய்தது. சண்டையை நிறுத்தக்கூடாதென்று எம். மாண்டலு (M. Mandel)-ம், எம். மாரினும்(M. Marin)சொன்ன வார்த்தைகள் எடுபடவில்லை.

மறுபடியும் அமெரிக்காவுக்கு தந்தி கொடுத்து உதவி கேட்டார்கள்; சாதகமாக பதிலும் வந்தது; ஆனால் இக்காரணங்களால் சரணாகதி சர்ச்சை சற்று தாமதிக்கப் பட்டதே ஒழிய நின்றபாடில்லை.

"எங்கள் ஸர்வ பலத்தோடு உங்களுக்குத் துணை நிற்கிறோம்; உங்கள் ஸ்வதந்திரம் நிலைக்கும்வரை போர் செய்வோம்; இதற்காக நம்மிரண்டு ஸாம்ராஜ்யங்களையும் ஒன்றுசேர்த்துக்கொள்ளுவோம்" என்று பிரிட்டன் கடைசியாகச் செய்தி விடுத்தது.

இதுவும் பயன்படவில்லை. இதற்கு மறுநாள் (ஒரு வெள்ளிக்கிழமை) ஜெர்மானியர் பாரிஸ் (Paris)-க்குள் நுழைந்தபோது வெய்கான் எதிரியைத் தடுக்கவேயில்லை. பிரிட்டன் மற்றொரு ப்ரயத்தினமும் செய்து பார்த்தது. "பிரிட்டனையும் ப்ரான்ஸையும் ஒரு ஐக்கியநாடாகச் செய்துகொள்ளுவோம். இரண்டு ராணுவங்களையும் ஒரே யுத்தசபையின்கீழ் வைத்து யுத்தம் செய்வோம்" என்று பிரிட்டன் மற்றொரு செய்தி விடுத்தது.

ப்ரெஞ்சுப்படைகளும் தீரமாய்த்தான் சண்டை செய்தன. ஆனால் எதிரியின் முன்னேற்றம் நிற்காததினால் சேனாதிபதிகளுக்கு, தாது இறங்கிவிட்டது.

மறுநாள் ப்ரெஞ்சு மந்திரி சபை மறுபடியும் கூடிற்று; ஒரே நாளில் 3-மீட்டிங்குகள் கூடினார்கள். எம் ரெயினாட் கக்ஷி படுத்தது. அக்கிராசனர் லெப்ரானு (President Lebrun)-ம் எதிர் கக்ஷியை ஆதரித்தார். எம். ரெயினாடை வேலையிலிருந்து நீக்கி மார்ஷல் பிடேனை பிரதம மந்திரியாக நியமித்தார். இதெல்லாம் இரவு $10\frac{1}{2}$-மணிக்கு நடந்த சம்பவங்கள். வேலையை ஏற்றுக்கொண்டக்ஷணமே ப்ரான்கோ (ஸ்பெயின்) துவாராவாக, மார்ஷல் பிடேன் சமாதானம் செய்து கொள்ள, ஹிட்லருக்கு தந்தி கொடுத்தார்.

இதுவே ப்ரான்ஸில் நடந்த நாடகம்.

அனுபந்தம் II.

1940-ம் வரு ஜூலை மீ 16வ செவ்வாய்க்கிழமை மாலை புதுக்கோட்டை டவுன் ஹாலில் கூடிய பொதுக் கூட்டத்தில் மஹா-ா-ா-ஸ்ரீ His Highness the Raja அவர்கள் செய்த பிரசங்கம்.

Sir Alexander, சீமாட்டிகளே! சீமான்களே!

புதுக்கோட்டை மக்களாகிய உங்கள் முன்பு, யுத்த சம்பந்தமாக நாம் பேசி, இன்னும் பல நாள் ஆகவில்லை.

மேன்மை தங்கிய நம்முடைய இராஜ—சக்கரவர்த்திக்கு, நம்முடைய இராஜ பக்தியையும், யுத்தத்தில் துன்பப்பட்டோருக்கு, நம்முடைய அனுதாபத்தையும், வைசிராயின் 'யுத்தகாரிய நிதிக்குத்' தாராளமாகப் பொருளுதவி செய்வதின் மூலம் விளக்கிக்காட்டும்படி, நாம் உங்களை வேண்டினோம்.

அப்பொருளுதவியும், மிகுதியாகவே வந்து கொண்டிருக்கிறது என்பதையும் இவ்விடத்தில் நாம் பெருமையாக உங்களுக்குத்தெரிவிக்கிறோம். அப்பொழுது நாம் சொன்ன முக்கியமான விஷயங்களில் ஒன்று என்னவென்றால், இந்த யுத்தமானது ஒரு உலக யுத்தம் என்பதும், ஜெர்மனிக்கும், அதன் அயல் நாடுகளுக்கும், ஏற்பட்டுள்ள ஒரு சாதாரணமான சிறிய போர் அன்று என்பதுமாகும்.

அதே விஷயத்தை, தற்பொழுது நினைப்பூட்டவேண்டிய அவசியம் இல்லை. மிகவும் சாமானிய அறிவுள்ளவனுக்குங்கூட, அவ்விஷயம் மிகவும் தெளிவாகப் புலனாகின்றது. அதைப்பற்றி நாம் பாராட்டினாலும், இல்லாவிட்டாலும், நாமும், இந்தியாவும், இந்தியாவென்றால் புதுக்கோட்டையும் அந்தப்போரில் சம்பந்தப் பட்டிருக்கின்றோம். நம்முடைய மேற்குக் கடலெல்லைக்கு அப்பால் உள்ள இத்தாலியர்கள், தற்பொழுது நமக்குத் தீவிரமான பகைவர்களாயிருக்கிறார்கள். ஜப்பானியர்கள், மலாக்கா ஜலசந்திகளின் வழியாக, நம்முடைய கீழ்கடலெல்லைக் கப்பால் ஆசையோடு எட்டிப்பார்க்கிறார்கள். அவ்வழியானது முன்பு இருந்ததைக் காட்டிலும், இப்பொழுது அவர்கள் வருவதற்கு எளிதாயிருக்கின்றது. ஏனென்றால், நமக்கு நேசமாயும், அவர்களுக்கு இடஞ்சலாகவும் இருந்த French Indo China-வும், டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளும் தளர்ச்சியடைந்து வருகின்றன.

நம்முடைய தேசத்தின் வடவெல்லைகளுங்கூட, வடக்குத் தேசங்களுக்கும், மேற்குத் தேசங்களுக்கும், இருக்கின்ற பொருந்தாத பேராசையினால் நெருக்குண்டு, சிதறும் தருவாயிலிருக்கும் தேசங்களுக்கருகாமையில் இருக்கின்றன.

ஏற்கனவே நாம் சொல்லிய விஷயங்களைத் திரும்ப எடுத்துச்சொல்லவும், உங்கள் நிலைமையென்ன, நோக்கங்களென்ன, இவைகளைப்பற்றி, உங்களுக்குச் சொல்வதற்கும், இதுவே தகுந்த சமயம்.

நாம் உங்களுக்குத் திருப்பிச் சொல்லப்போகும் விஷயமானது, ஏற்கனவே பேசியதில் உள்ள மூன்று அடிப்படையான விஷயங்களேயன்றி வேறில்லை.

ஒன்று—இங்கிலாந்தின் பாத்தியங்களும், இலட்சியங்களும், எப்பொழுதும் இந்தியாவைச் சார்ந்ததே.

இரண்டு—என்னுடைய குடும்பமும், குடிகளாகிய நீங்களும், மாட்சிமை தங்கிய இராஜ—சக்கரவர்த்திக்கும், அவரது சாம்ராஜ்யத்திற்கும், பக்தியாயும், அன்பாயும் இருந்து வருகின்றோம். இனியும் அவ்வாறே இருப்போமாக.

மூன்று—சமீப எதிர்காலத்தின் தோற்றம், எவ்வளவு துக்ககரமாகத் தோன்றினும், ஏமாற்றமடையும்படியான சமாசாரங்கள் அடிக்கடி சம்பவித்த போதிலும், கடைசியில், வெற்றியானது இங்கிலாந்திற்கே கிடைக்கும் என்ற ஒரு திடமான துணிவு என்னிடம் உள்ளது.

ஏனென்றால், அதனுடைய உண்மையான நீதியிலிருந்தும், அதன் சரித்திர நிகழ்ச்சிகளிலிருந்தும், அதன் பிரஜைகளின் தன்மையிலிருந்தும், அதன் சாம்ராஜ்யத்திற்குள்ள ஏராளமான திரவிய சாதனங்களிலிருந்தும், இங்கிலாந்திற்கே வெற்றி கிடைக்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

நாம் சொன்ன விஷயங்கள் ஒரே மாதிரியாக இருந்தாலும், தற்போது உள்ள சந்தர்ப்பங்கள், அவைகளை உடனே நிறைவேற்றும்படியாக இருக்கின்றன. நடுநிலைமை வகித்த அநேக தேசங்களும், நம்முடைய நேசதேசங்கள் பலவும் சோர்ந்து விழுந்துபோயின.

பிரிட்டனுக்கு முக்கிய துணையாயிருந்த ராஜ்யமானது, மனச்சாட்சியற்றதும், மானிடத்தன்மையற்றதுமான ஜெர்மனியின் யந்திரங்கள் பாய்ந்து தாக்குதலால், தோல்வியுற்றது.

நிலைகெட்டுத் திரிகின்ற ஒரு பெரிய மிருகம், இரை உண்டபின்பு, மிஞ்சியிருக்கும் துணுக்குகளுக்காக, நரிகள் மோப்பம் பிடித்து அவைகளைச் சுரண்டுவதுபோல், நரிகள்போன்ற சிறிய தேசங்கள், தலைசுற்றித் திரிகின்றன. இதுவே தற்போது உள்ள சீர்கேடான நிலைமை.

இதன் விளைவு என்னவென்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமான நம்முடைய தாய் நாடானது, இதுவரையிலும் எடுப்பதற்குத் தேவையில்லாத, பெரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

தனிமையாகவும், தைரியமாகவும், எல்லோரையும் உற்சாகப்படுத்தி, இந்த அரக்கனையும், அவனோடு சேர்ந்து, கள்ளத்தனமாகக் கொள்ளையடித்துத் திரிகின்ற அற்ப மிருகங்கள் போன்ற சிறிய தேசங்களையும், கெட்டியாகப் பிடித்து, அடக்குவதற்கான பெரிய முயற்சியை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மேற்கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்தில், இங்கிலாந்தில், எல்லோரையும் மிகவும் துன்பப்படுத்திக்கொண்டிருந்த 'Dragon' என்ற ஒரு கொடிய பறவை நாகத்தை, செயிண்ட் ஜார்ஜ் கொன்று, இங்கிலாந்தைக் காப்பாற்றினார். அதைப்போலவே, இப்பொழுது, உலகத்தை வருத்துகின்ற இந்த நவீனமான மிகக்கொடிய மிருகத்தை வதைத்து, உலகத்தைக் காப்பதற்கு, நம் சாம்ராஜ்யம் முற்பட்டு நிற்கின்றது.

இப்பொழுது, நாம், "முயற்சி" என்று சொன்னோம். இன்றையதினம், நாம், உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோளின் முக்கியமான விஷயமும், அம் முயற்சியைப்பற்றியேயாகும்.

நாமும், புதுக்கோட்டை நகரவாசிகளாகிய நீங்களும், நம்மைச் சேர்ந்த சகல மானதும் உள்பட, அப்பெருமுயற்சியில் பங்குள்ளவராய் இருக்கிறோம் என்பதை, இப்பொழுதுதான் ஞாபகப்படுத்தினோம்.

இதுவரையில், நம்மில்யாரேனும் ஒருவர், தம் சம்பந்தப்பட்டவரையில், போரின் அதிர்ச்சியையும் வேகத்தையும், உணராதிருப்பாரேயானால், அவர் அவ்வாறு இருத்தல் பெருந்தவறு என்பதை உங்களுக்கு உறுதியாகச் சொல்லு கிறோம். நம்முடைய பலாபலன்களெல்லாம், நேர்முகமாகவும், நிச்சயமாகவும், பிரிட்டனோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், அதனுடைய பெரு முயற்சிக்குத்தக்கவாறு, நம்மிடத்தில் இருந்தும் அம்முயற்சி தோன்றவேண்டும்.

இந்த முயற்சியில், எவன் நம்முடன் சேரவில்லையோ, அவன் நம்முடைய விரோதியாகிறன். இதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எவன் தன் பொருட்டாவது, அல்லது இராஜகாரியங்கள் பொருட்டாவது, ஏற்பட்ட பகைமை யினால், எதிரியின் வெற்றியையோ, அல்லது பிரிட்டிஷாரின் பின்வாங்குதலையோ கேட்டு, அவைகளினால் மகிழ்ந்து, அவைகளைப்பற்றி, அயலாரிடத்து அதிகப் படுத்திப் பேசுகிறானோ, அவன் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும், நமக்கும், விரோதியாகிறான். எவன் தன்னுடைய உடமைகளையோ அல்லது செல்வங்களைப் பற்றியோமாத்திரம் எண்ணுகிறானோ, எவன் தன்னிடத்துள்ள நோட்டுகளை யெல்லாம் ரூபாய்களாக்க விரும்பி, அவ்வாறு செய்யவேண்டுமென்ற முடிவிற்கு வருகிறானோ, எவன் நல்ல நிலைமையில் இருக்கின்ற பாங்கியில் உள்ள, தன் சேமிப் பையெல்லாம் திரும்பவாங்கி பூமியில் புதைத்துவைக்க விரும்புகிறானோ அவனும் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும், நமக்கும் விரோதியாகிறான். எவன், உண்மையாக இருக்கின்ற விஷயங்களுக்கு மாறாக இல்லாதவைகளை கிளப்புதற்கும், முதலாளித்துவத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வதற்கும், அரசாங்கத்திற்கு விரோதமாக ஜனங்களைக் கிளர்ச்சி செய்யும்படி தூண்டுதற்கும், இச்சமயம்தான் ஏற்றது, என்று எண்ணுகிறானோ, அவன் தனக்குப் போராதகாலத்தைத் தேடிக் கொள்ளுகிறானேயொழிய வேறல்ல. இந்த பிரசினைகள் எல்லாம், நம்முடைய சங்கற்பமில்லாமலே ஒரு முடிவடையும் நிலைமையில் இருந்துவருகின்றன. அவைகள், தற்போது, பொருட்படுத்தவேண்டிய பெரிய விஷயங்களாகத் தோன்றவில்லை. எவன் இவ்விஷயங்களையெல்லாம் பெரிதாகக் கருதுகிறானோ, அவன் நமது விரோதிக்கு உதவிசெய்கிறவனாகிறான். எவன், எல்லா முயற்சிகளை யும் புறக்கணித்து, உலகத்தின் நெருக்கடிக்கும் அவனுக்கும், யாதொரு சம்பந்த மும் இல்லையென்று பாசாங்குசெய்து, அதிகாரிகளுக்கு உதவி செய்யாமலும், நல்ல காரியங்களுக்காகச் செய்யப்படுகின்ற பொது முயற்சியில், சேராமலு மிருக்கிறானோ அவன் நம்முடைய பகைவருக்கு உதவி செய்கிறவனாகிறான்.

சீமாட்டிகளே! சீமான்களே! இவைகளின் பொருட்டுத்தான், நாம் இங்கு பேசுகிறோம். இதற்காகத்தான், தர்பார் இக்கூட்டத்தை அழைத்திருக்கிறார்கள்.

நம்முடைய பகைவர்களின் தைரியத்தைச் சீர்குலைக்கவும், நம்முடைய இராஜ விசுவாசத்தைக் காண்பிக்கவும், நம்முடைய க்ஷேமத்தைப் பாதுகாப்பதற்குமே, நாம் இங்கு கூடியுள்ளோம்.

சமீபகாலத்தில், அநேக ஸமஸ்தானங்களிலும், இராஜதானியில் உள்ள பல ஜில்லாக்களிலும், யுத்த சம்பந்தமான காரிய நிர்வாக சபைகள் கூட்டப்படுவதை, நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள். பொதுவாகக் கூறுமிடத்து, அதன் வேலைகள் பின்வருமாறு.

1. உண்மையான செய்திகளைப் பரவச்செய்வது.

சாதகமாகவோ, அல்லது பாதகமாகவோ, இருக்கின்ற ஆதாரமற்ற வதந்திகளையும், அதோடு பகைவர்களின் பிரசாரங்களையும், ஒழிக்க முயற்சிப்பது. அவைகளைப்பற்றி அதிகாரிகளுக்கு அறிவிப்பது.

2. தேசத்தின் கௌரவத்தையும் பண நிர்வாகத்தையும் காப்பாற்றுவது.

பாங்கியில் போட்ட தொகை முழுவதையும், திகில்கொண்டு திரும்பவாங்க முயற்சிப்பதை தடுப்பது. கவர்ன்மெண்ட் பாண்டுகளை எல்லாம் அனுவசியமாக விற்றலையும், நோட்டுகளை எல்லாம் நாணயங்களாக மாற்றுதலையும், தடுப்பது. பாமர ஜனங்களை அதைரியப்படுத்தும்படியான செயல்களையும், வியாபாரத்திற்கு இடையூறு செய்யக்கூடியதுமான, எல்லாக் காரியங்களையும், நிகழ ஒட்டாமல் தடுப்பது. மேலும், அவைகளைப்பற்றி அதிகாரிகளுக்கு அறிவிப்பது.

3. தேச நலத்திற்கான எல்லா காரியங்களையும், ஒழுங்காக நடைபெறச் செய்வதற்கு உதவி செய்வது.

4. யுத்தத்தின் பலவிதமான ஸ்தாபனங்களுக்கு வேண்டிய ஆட்களைச் சேர்ப்பதற்கு, உதவி செய்வது.

5. ஐந்தாவது படைகளின் முயற்சிகளை அழிப்பதற்கும், முக்கியமான, பொது ஸ்தாபனங்கள் அழியாமல் பாதுகாப்பதற்கும், அதிகாரிகளோடு சேர்ந்து உழைப்பது.

இவைகளே நாம் முன்சொன்ன யுத்தகாரிய நிர்வாக சபையின் வேலைகள்.

இதைப்போன்ற காரிய நிர்வாக சபையொன்றை இங்கு கூட்ட நாம் கருதுகிறோம். சமீபகாலங்களில் பத்திரிகைகளில் காணப்படுகின்ற ஊர் காவலர் (Civic guards) களைப்பற்றி எவரேனும் கேட்க விரும்பினால், அதைப்பற்றி, தர்பார் வேண்டிய முயற்சி எடுத்து வருகிறார்கள் என்றும், நம்முடைய சொந்த பாதுகாப்புப் படைகளுக்கு உதவியாக, இந்தத் துணைப் படைகளைச் சேர்த்ததை, புதுக்கோட்டையானது பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் என்பதை, அவர்களுக்குத் தெரிவிக்கிறோம். மேலே விளக்கிக் காட்டிய வழிகளில் உறுதியாக உழைக்கக்கூடிய ஒரு யுத்தகாரிய நிர்வாக சபை அவசியம் வேண்டும். ஆகவே, அதற்கு வேண்டிய தீர்மானங்களைக் கொண்டுவந்து, அவைகளுக்கு உங்கள் முழு கவனத்தையும், ஒற்றுமையான அனுமதியையும், அளிப்பீர்களென்று நம்புகிறோம்.

WEEKLY WAR SUMMARY.

10—7—40 to 17—7—40.

France.—By 225 Votes to 1 the French Senate has invested Marshal Petain with full powers to change the French Constitution and the French National Assembly has ratified the step by 569 Votes to 50. Marshal Petain, deposing M. Lebrun, President from 1933, has become the Chief of State and will consult the Nation on the Constitution by a Referendum. The Home of Liberty, Equality and Fraternity will no longer entertain these ideals. FRANCE will close down her manufactories and become a peasant land for the benefit of the tyrants. The status of her sons will be that of hewers of wood and drawers of water. In the midst of this travesty Marshal Petain will sit in State, with a council of 12 ministers, a dictator—but really without authority. Hitler will pull the strings from behind and the marionette will dance.

But hope remains. Young Frenchmen are deserting their homes in the Coastal towns of FRANCE and are joining the military, naval and air forces under General de Gaulle. The Celebration of the Day of the Fall of Bastille on July 14 in LONDON is a timely reminder that the Third Republic will be replaced by a Fourth.

Turkey.—By the publication of a German White Book rumours had been set up by GERMANY of a Russian demand and ultimatum for the control of the Dardenelles. Fortunately, the public utterances of Dr. Saydam the Turkish Prime Minister on the 12th that he treated the White Book with 'contempt', and RUSSIA's official repudiation of the ultimatum, have brought the affair to an end.

This White Book has also been used by the Germans to create misunderstanding between RUSSIA and ENGLAND, on the grounds that that ENGLAND was planning a direct attack on the Oil wells at BAKU. The British military staff had, it is true, once examined the possibility of an attack on the Caucasian wells in certain eventualities; but the matter went no further. The representations of Sir Stafford Cripps have dispelled the Russian suspicions.

Rumania.—Has left the League of Nations at the bidding of the Axis Powers; but her troubles are not yet over. HUNGARY is asking for a slice out of RUMANIA and Herr Hitler and Count Ciano have graciously promised their help at a recent conference at MUNICH attended by Count Teleki the Hungarian Minister.

Egypt.—Italy's machinations to wean EGYPT from BRITAIN have failed with her Prime Minister's declaration of July 11, that he knew how to view ITALY'S promises and fair words.

Far-East.—In the Far-East, Anti-British feeling is developing in the International Settlement and the French Concession. JAPAN has detained the British steamer "Shengkin" carrying ammunition from TIENSTEIN to SHANGHAI. She has also asked that military supplies should cease through BURMA to CHINA. As a result the BURMA-YUAN Road has been closed for 3 months. The Japanese Cabinet has resigned and the Japanese Army and Navy are setting up a new 'political structure' intent on aggression.

Abyssinia.—Haile Selassie has been recognised Emperor of ABYSSINIA with the status of an ally of BRITAIN.

Eire.—Has raised an army of 10,000 for defence, realising that her neutrality would be no security against an unscrupulous enemy.

America.—Fearing a 'new enslavement in which men may not speak, may not listen and may not think' has sanctioned an additional expenditure of 4,848 million dollars for defence bringing the total up to 10,000 million dollars.

War in the Sea.—FRANCE has 8 battleships of the line at the time of the Armistice. All of them except the "Jean Bart" (which is now in a port in Morocco) have been put out of action. During the week the Italian Fleet, contacted by the British Mediterranean Squadron, withdrew behind a smoke screen and though hotly chased, reached the shelter of shore batteries.

Mercantile losses due to enemy action up to June 20 were 6 British ships (30,377 tons), 3 Allied ships (9,622 tons) and 3 Neutral ships (11,340 tons). The number of ships convoyed up to July 2 was 27,247 with loss of 40 ships or 1 in 681. Germany's loss since the War has been 8,77,000 tons and Italy's 2,44,000 tons.

War on Land.—The only events of the week have been the minor British attacks on LIBYA. Troops were withdrawn from British MOYALE on July 15.

War in the Air.—R. A. F. Raids over the enemy territories and GERMANY'S raids on the British Coasts have been going on daily. On July 10 there was a "dog-fight" the Channel, the 'biggest yet', in which some 70 enemy bombers came supported by as many fighters and took a

bad knock. The following is a statement of the raids. The German losses have been high. British air superiority has been proved to be 5 : 1.

July 9.—R. A. F. attack on enemy barges at ZEVOLLE, HATTAM, WEASP, ELBURG and DELFT; aerodromes at SOISSONS and DOUAI; naval bases at WILHELMSHAVEN—British loss 7 planes.

GERMAN Raid.—Sporadic attack on South Coast–no military objectives hit–Enemy loss 8 bombers.

July 10.—R. A. F. attack on dockyards at WILHELMSHAVEN and Bremen; goodsyards in the RUHR, oil refineries at MARKAM and aerodromes at BARKUN, TEXEL, SCHIPOL and WAELHAVEN. Loss 3 planes.

GERMAN Raid.—On Channel Coast and a Norfolk village—a few civilians killed—150 Enemy planes engaged—14 shot down and 23 damaged.

July 11.—R.A.F. attack on aerodromes at ST. OMER and AMIENS. Loss 5 planes.

GERMAN Raid.—On British Coast—Loss 23 planes.

July 12.—R. A. F. attack on aerodromes at SCHIPOL, TEXEL, munition factories at LUDWIGHAVEN, COLOGNE ; blast furnaces at SIEBURG and a factory at MULTERSTADT.

GERMAN Raid.—On CONVOY off the South East Coast—Loss 11 planes.

July 13.—R. A. F. attack on EMDEN and KIEL—No loss.

GERMAN Raid.—On Straits of DOVER—Loss 12 planes.

July 14.—R. A. F. attacks on aircraft factories in BREMEN and DIECHESHAUSEN.

GERMAN Raid.—On a British Convoy—Loss 7 planes.

July 15.—R. A. F. attack on aircraft Factory at BREMEN, aircraft Stores at PADENBORN and DIEPHOLZ, oil plants at HAMBURG and BREMEN and Goodsyards at HAMM and SOEST.

GERMAN Raid.—One air-craft flew over ENGLAND ; a few bombs were dropped ; there was no damage.

ECONOMIC CONDITIONS.

While, in ENGLAND, the usual harvest of 18 months has been reaped in 12 months, conditions on the Continent are deplorable. Sugar and Coffee are rational in DENMARK ; in NORWAY the general forecast of food is bad and there is a shortage of milk and eggs. In YUGOSLAVIA harvest has been destroyed by rain and hail. In HUNGARY, the harvest of wheat, rye and rapeseed is poor. GERMANY has brought EUROPE to the verge of starvation.

வார யுத்தச் செய்திகள்.

(10—7—40 லிருந்து 17—7—40 வரை)

ப்ரான்ஸ்.—இந்த தேசத்தில் ஸெனெட் (Senate) என்றும், நாஷனல் அஸெம்ப்ளி (National Assembly) என்றும் இரண்டு சபைகள் உண்டு. ஸெனெடில், 225 வோட்டுகள் சாதகமாயும், ஒரு வோட் பாதகமாயும், அஸெம்ப்ளியில் சாதகமாய் 569 வோட்டுகளும், பாதகமாய் 50 வோட்டுகளும் பெற்று அரசியலை மாற்றி அமைக்க மார்ஷல் பிடேன் அதிகாரம் பெற்றிருக்கிறார். 1933-ல் இருந்து அக்கிராசனராய் இருந்த எம். லெப்ரன் (M. Lebrun) ராஜீனுமா செய்துவிட்டார். ஸ்டேட் ஸர்வாதிகாரி (Chief of State) என்ற புதுப்பெயரோடு மார்ஷல் பிடேன் அதிகாரம் செலுத்துவார். புது அரசாங்கத்தைப்பற்றி, பொதுஜனங்கள் அபிப்பிராயத்தையும் கேட்கப் போகிறார். "சுயேச்சை, ஸமத்வம், ஸகோதரத்வம்" ஆகிய மேல்நோக்கங்களை இதுவரையில் பாராட்டிய ப்ரான்ஸ் இனி இவைகளைவிட்டுவிடும். தொழிற்சாலைகளையும் மூடிவிட்டு, இனி, விவசாயத்தை முக்கியமாகக் கைக்கொள்ளும். தன் விளைபொருள்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும். மார்ஷல் பிடேனுக்கு 12 மந்திரிகள் உண்டு. வெளிக்கு ஸர்வாதிகாரியாய் இருப்பார். ஆனால் உண்மையில், ஹிட்லர் ஆட்டிவைத்தபடியேதான் ஆடவேண்டும்.

ப்ரான்ஸ் இப்படியே கெட்டுப்போகாது. கடற்கரை பிரதேசங்களில் வசிக்கும் ப்ரெஞ்சு வாலிபர்கள் பலர் ஏற்கனவே ஊரைவிட்டு வெளிப்பட்டு ஜென்ரல்-டி-கால் திரட்டும் ராணுவங்களில் சேர்ந்து ஜெர்மனியை எதிர்க்க தயாராய் வருகிறார்கள். பாஸ்டில் (Bastille) ஜெயிலைத் தகர்த்திய தினக் கொண்டாட்டத்தை 14-ம் தேதி லண்டனில் பிரெஞ்சுக்காரர்கள் கொண்டாடினார்கள். இதிலிருந்து ப்ரான்ஸுக்கு மறு (அதாவது 4-வது) முறை சுயேச்சை வருமென்று நினைக்கலாம். ஏனெனில், பாஸ்டிலைத் தகர்த்தியதிலிருந்துதான் ப்ரெஞ்சு உரிமைகள் ஏற்பட்டன.

துருக்கி.—டார்டனெலிஸ் (Dardenelles) துறைமுகத்தைத் துருக்கி கொடுக்காவிட்டால் ரஷியா துருக்கியை சண்டைக்கு இழுப்பதாக வதந்தி ஒன்று இருந்தது. இது ஜெர்மன் ஸர்க்கார் வெளியிட்டிருக்கும் ஒரு தஸ்தாவேஜியின் சூழ்ச்சி. இப்புஸ்தகத்தை துருக்கி பிரதம மந்திரி 12உ பகிரங்கமாய் கண்டித்துவிட்டார். ரஷியாவும் மறுத்துவிட்டது.

இந்த தஸ்தாவேஜைக்கொண்டே, ரஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் வேறு ஒரு கலகத்தை உண்டாக்க ஜெர்மனி முயன்றது; அதாவது ரஷியாவுக்குச் சொந்தமான எண்ணெய் கிணறுள்ள பாகு (Baku) என்ற ஊரை இங்கிலாந்து பிடிக்க உத்தேசித்திருப்பதாகக் கிளப்பிவிட்டது. இங்கிலாந்து இதைப்பற்றி ஏதோ ஒரு சமயம் யோசித்ததைத்தவிர நடவடிக்கை ஒன்றும் ஏற்படவில்லை. ரஷியாவில் வசிக்கும் இங்கிலாந்து ப்ரதிநிதியான ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் (Sir Stafford கிரிப்ஸ்) நட்பை எடுத்துக்காட்ட, ரஷியாவுக்கு மனத்தாங்கல் நீங்கிவிட்டது.

ருமேனியா.—ஸர்வதேச சங்கத்திலி (League of Nations) ருந்து ருமேனியா விலகிவிட்டது. ஆனல் அதற்கு கஷ்டங்கள் முடிந்தபாடில்லை. ரஷியா அதின் ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டது ஞாபகமிருக்கலாம். இப்பொழுது ஹங்கேரி (Hungary)க்கும் மற்ருெரு பாகம் வேண்டுமாம். இதற்காக ம்யூனிக் (Munich)ல் ஹிட்லர் (Hitler), கவுன்ட்ஸியானே (Count Ciano), ஹங்கேரி மந்திரி கவுன்ட் டெலெகி (Count Teleki) இவர்கள் கூடிப்பேசி, ஏதோ சிறு பாகத்தை பிடுங்கிக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

ஈஜிப்ட்.—ஈஜிப்டை பிரிட்டன் பக்கத்திலிருந்து பிரிக்க இதாலிசெய்த முயற்சி பலிக்கவில்லை. 11-ம்தேதி வெளிப்படையாய் ஈஜிப்ட் மந்திரி இதாலியின் பசப்பு வார்த்தைகளையும், ஆசை மொழிகளையும் கேட்டு ஏமாந்துபோகப்போவது இல்லையென்று சொல்லிவிட்டார்.

ஜப்பான் முதலியன.—இண்டர் நாஷனல் ஸெட்டில்மெண்டு (International Settlement), ப்ரெஞ்சு கன்ஸெஷன் (French Concession)களில் பிரிட்டன் இடத்தில் விரோதபுத்தி ஏற்பட்டுவருகிறது. ஷெங்கின் (Shengkin) என்ற பிரிட்டிஷ் கப்பலில் யுத்த சாமான்கள் டின்ஸின் (Tientsin)ல் இருந்து ஷாங்கே (Shangai) போய்க்கொண்டிருந்தது. இந்தக் கப்பலை ஜப்பான் தடுத்துவிட்டது; பர்மாவின் வழியாக சீனவுக்கு யுத்த தளவாடங்கள் போகக்கூடாதென்றும் சொல்லுகிறது. இதின் பயனுக பர்மா—யூவான் ரஸ்தாவை 3-மாதங்களுக்கு அடைத்துவைக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானில் மந்திரிகள் ராஜினமா செய்து விட்டார்கள். ராணுவஸ்தர்கள் கூடி அரசியலை மாற்றப்போகிருர்கள். இதர நாடுகளைப் பிடிக்க உத்தேசம்.

அமெரிக்கா.—சுயேச்சையாய் பேசவும், நினைக்கவும், கேட்கவுங்கூடாது என்று உலகத்தில் இப்பொழுது புது அடிமைத்தனம் ஜெர்மானியரால் ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தடுக்கவென்று பிரெஸிடெண்டு ரூஸ்வெல்ட் ராணுவங்களை அதிகப்படுத்த உபரியாக 4,848 மிலியன் டாலர்கள் ஸாங்கிஷன் வாங்கிக்கொண்டு இருக்கிருர். ஏற்கனவே ஸாங்கிஷன் வாங்கினதோடு மொத்தத்தொகை 10,000 மிலியன் டாலர்கள்.

கடற் சண்டை.—ப்ரான்ஸுக்குச் சொந்தமான 8-யுத்தக்கப்பல்களில் 7 சண்டைக்கு உபயோகமில்லாமல் செய்தாய்விட்டது. 8-வதான ஜீன் பார்ட் (Jean Bart) யுத்தக்கப்பல் மொராக்கோ (Morocco) துறைமுகத்தில் இருக்கிறது. இந்த வாரத்தில் இதாலியின் கடற்படையை, பிரிட்டிஷ் கடற்படை கண்டு விரட்டிற்று; புகையை உண்டாக்கிக்கொண்டு அதன் மறைவில் இதாலி கடற் படை ஓடிவிட்டது.

ஜூன் 20உ வரை வியாபாரக்கப்பல்களில் நஷ்ட விவரம் கீழ்க்கண்டபடி:— பிரிட்டிஷ் கப்பல்கள் 6 (30, 377 டன் நிறை); நேயக்கப்பல்கள் 3 (9,622 டன்); பொதுநாட்டுக்கப்பல்கள் 3 (11,340 டன்); ஜூலை 3உ வரை யுத்தக்கப்பல்கள் துணையில் சென்ற வியாபாரக்கப்பல்கள் 27, 247; இவைகளில் சேதம் 40 கப்பல் கள்; அதாவது 681 கப்பல்களுக்கு ஒரு கப்பல் சேதம்.

தரையுத்தம்.—லிபியா (Libya)வில் பிரிட்டிஷ் படைகள் செய்துவரும் சண்டையைத்தவிர வேறு ஒன்றுமில்லை. ஜூலை 15ல் பிரிட்டிஷ் மொயோலா விலிருந்து படைகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஆகாயயுத்தம்.—பிரிட்டிஷ் விமானங்கள் எதிரி நாடுகளிலும், எதிரி விமானங்கள் பிரிட்டன் கடற்கரைகளிலும், ஒவ்வொருநாளும் எதிர்த்துவருகின்றன. ஜூலை 10-ம்தேதி கனத்தசண்டை ஒன்று பிரிட்டிஷ் கால்வாயில் (Channel) நடந்தது. ஜெர்மானியருக்கு அதிக நஷ்டம். 5 ஜெர்மன் விமானங்கள் இங்கிலிஷ் விமானம் 1-க்கு ஸமம் என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வாரத்திய நிகழ்ச்சிக்குறிப்பை கீழே காணலாம்.

ஜூலை 9ல—பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிய எதிரி ஊர்கள் :—ஸவோல் (Zwolle), ஹாட்டம் (Hattam), எல்பர்ச் (Elburg), டெல்ப்ட் (Delft); இவை கப்பல் நிலயங்கள் ; ஸாய்ஸான்ஸ்(Soissons), டொவே (Dovai); இவை விமான ஸ்டேஷன்கள் ; வில்ஹெல்ம்ஸ்ஹேவன். (யுத்தக்கப்பல் இருக்கும் இடம்). படையெடுத்ததில் சேதமான பிரிட்டிஷ் விமானங்கள் 7.

ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தின் தென்கரையில் சில இடங்களில் வெடிகளைப் போட்டன ; யுத்த நிலயங்கள் ஒன்றும் சேதப்படவில்லை. 8 பாம்பர் (Bomber) விமானம் எதிரிக்கு நஷ்டம்.

ஜூலை 10ல—பிரிட்டிஷ் விமானங்கள தாக்கிய இடங்கள் :—வில்ஹெல்ம் ஸ்ஹேவன் (Wilhelmshaven) ; ப்ரமன் (Bremen) ; இவை கப்பல் கட்டுமிடங்கள் ; ரூர் (Ruhr), பண்டசாலை ; மார்க்கம் (Markam) எண்ணெய் சுத்திசெய்யும் சாலை ; பார்க்கன் (Barkan), டெக்ஸல் (Texel), ஷிபோல் (Schipol), வாயல் ஹாவன் (விமான ஸ்டேஷன்கள்). விமானங்கள் நஷ்டமானது-3.

ஜெர்மானியர் கால்வாய்க்கரைப் பக்கங்களி (Channel Coast)லும், நார்பக் (Norfolk)-ல் கிராமம் ஒன்றையும் எதிர்த்தார்கள்—ராணுவஸ்தர்களல்லாத சிலர் கொல்லப்பட்டார்கள். 150 ஜெர்மன் விமானங்கள் படையெடுத்து வந்தன ; இவைகளில் 14 சுட்டுத்தள்ளப்பட்டன ; 23 உடைக்கப்பட்டன.

ஜூலை 11ல—பிரிட்டிஷ் விமானங்கள் ஸெயிண்டுஓமர் (St. Omer), ஏமியன்ஸ் (Amiens) என்ற இடங்களில் உள்ள விமான நிலயங்களை தாக்கின. பிரிட்டிஷ் நஷ்டம் 5 விமானங்கள்.

ஜூலை 12ல—பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிய இடங்கள் :—ஷிபோல் (Schipol), டெக்ஸல் (விமான ஸ்டேஷன்கள்) ; கொலோன் (Cologne) லட்விக்ஸ்ஹேவன் (வெடிமருந்துச்சாலைகள்); ஸீபர்க் (Sieburg)--உலைகள் ; மல்டர்ஸ் டாட் (தொழிற்சாலை).

ஜெர்மானியர் வியாபாரக்கப்பலுக்கு துணை செல்லும் யுத்தக் கப்பலை தென்கிழக்கு கரையில் தாக்கினார்கள். எதிரியின் நஷ்டம்—11 விமானங்கள்.

ஜூலை 13ல—பிரிட்டிஷ் விமானங்கள் எம்டனை (Emden)யும், கீலே (Kiel) யும் தகர்த்தன ; விமான நஷ்டமில்லை. எதிரி விமானங்கள் இங்கிலாந்தை எதிர்த்ததில் எதிரிக்கு நஷ்டம் 12 விமானங்கள்.

ஜூலை 14உ—ப்ரமன் (Bremen), டியசஸ்ஹாஸன் (Diecheshausen) ஊர்களின் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் படையெடுத்தன. ஜெர்மன் விமானங்கள் பிரிட்டிஷ் துணைக்கப்பல் ஒன்றைத் தாக்கின. எதிரிக்கு நஷ்டம் 7 விமானங்கள்

ஜூலை 15உ பிரிட்டன் தாக்கிய இடங்கள் :—ப்ரெமென் (விமானம் கட்டும் சாலை); பாடன் பூரன் (Padenborn,) டைபோல்ஸ் (Diepholz) விமானப் பண்டசாலைகள்; ஹாம்பர்க் (Hamburg), ப்ரெமென் (Bremen) (எண்ணெய் சுத்திசெய்யும் சாலைகள்); ஹாம் (Hamm), சோயஸ்ட் (Soest), பண்டசாலைகள். இன்று ஒரு ஜெர்மன் விமானம் இங்கிலாந்துக்கு வந்து, சில வெடிகளைப் போட்டது; சேதம் கிடையாது.

பொருளாதார நிலைமை.—இங்கிலாந்தில் 18 மாத விளைவு 12 மாதங்களில் கிடைத்திருக்கிறது; சுபிக்ஷம். எதிரியின் ஆதீன நாடுகள் பஞ்சம் வரக்கூடிய நிலையில் இருக்கின்றன. டென்மார்க்கில் சர்க்கரையையும், காப்பிக் கொட்டையையும் திட்டப்படி பிரித்துக்கொடுக்கிறார்கள். நார்வே(Norway)யில் சாப்பாட்டுச் சாமான்கள் போதாமல் போகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; இப்பொழுதே முட்டையும், பாலும் போதுமானபடியில்லை; யுகோஸ்லேவியா (Yugoslavia)வில் மழை, பனியால், பயிர்கள் சேதமாய்விட்டன. ஹங்கேரி (Hungary)யில் கோதுமை, ரை (Rye), ரேப் ஸீட் (Rapeseed) முதலிய தானியங்கள் சரிவர விளையவில்லை.

Sri Brihadamba State Press, Pudukkottai, 2,000—19-7-40.